CAREERS360

# AP SSC
# TAMIL
## Model Question Paper 2024 (First Language)

Image by Freepik

# SSC PUBLIC EXAMINATIONS- 2024

## FIRST LANGUAGE TAMIL - MODEL QUESTION PAPER

**TIME: 3hrs.15min** **Max Marks:100**

## WEIGHTAGE TABLES & BLUE PRINT

### TABLE(1): WEIGHTAGE TO ACADEMIC STANDARDS

| வ.எண் | கல்வித்திறன்கள் | மதிப்பெண் | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | புரிந்துக்கொள்ளுதல் – விடையளித்தல் | 32 | 32% |
| 2 | சுயமாக எழுதுதல் – படைப்பாற்றல் | 36 | 36% |
| 3 | மொழித்திறன் | 32 | 32% |
| | மொத்தம் | 100 | 100% |

### TABLE(2) WEIGHTAGE TO CONTENT

| வ.எண் | பாடப்பொருள் | மதிப்பெண் | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | செய்யுள் | 20 | 20% |
| 2 | உரைநடை | 20 | 20% |
| 3 | துணைப்பாடம் | 20 | 20% |
| 4 | செய்யுள் / உரைநடையிலிருந்து படைப்பாற்றல் வினா | 08 | 08% |
| 5 | மொழித்திறன் | 32 | 32% |
| | மொத்தம் | 100 | 100% |

### TABLE(3) WEIGHTAGE TO TYPE OF QUESTIONS

| வ.எண் | வினாவகை | வினாக்களின் எண்ணிக்கை | மதிப்பெண் | மொத்த மதிப்பெண் | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | நெடுவினா | 07 | 08 | 56 | 56% |
| 2 | சிறுவினா | 03 | 04 | 12 | 12% |
| 3 | குறுவினா | 09 | 02 | 18 | 18% |
| 4 | புறவயவினா | 14 | 01 | 14 | 14% |
| | மொத்தம் | 33 | | 100 | 100% |

# SSC PUBLIC EXAMINATIONS- 2024 FL TAMIL – MODEL QUESTION PAPER

## BLUE PRINT

| வ.எண் | | புரிந்துக்கொள்ளுதல் – விடையளித்தல் | | | | சுயமாக எழுதுதல் – படைப்பாற்றல் | | | | மொழித்திறன் | | | | மொத்தம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | நெடு வினா | சிறு வினா | குறு வினா | புறவய வினா | நெடு வினா | சிறு வினா | குறு வினா | புறவய வினா | நெடு வினா | சிறு வினா | குறு வினா | புறவய வினா | நெடு வினா | சிறு வினா | குறு வினா | புறவய வினா |
| 1 | செய்யுள் | (8)$^{1}$ | | | | (8)$^{1}$ | (4)$^{1}$ | | | | | | | (8)$^{2}$ | (4)$^{1}$ | | |
| 2 | உரைநடை | (8)$^{2}$ | | | | | (4)$^{1}$ | | | | | | | (8)$^{2}$ | (4)$^{1}$ | | |
| 3 | துணைப்பாடம் | (8)$^{1}$ | | | | (8)$^{1}$ | (4)$^{1}$ | | | | | | | (8)$^{2}$ | (4)$^{1}$ | | |
| 4 | செய்யுள் / உரைநடையிலிருந்து படைப்பாற்றல் வினா | | | | | (8)$^{1}$ | | | | | | | | (8)$^{1}$ | | | |
| 5 | மொழித்திறன் | | | | | | | | | | | (2)$^{9}$ | (1)$^{14}$ | | | (2)$^{9}$ | (1)$^{14}$ |
| | மொத்தம் | 32 | | | | 24 | 12 | | | | | 18 | 14 | 56 | 12 | 18 | 14 |

குறிப்பு: அடைப்புக்குள் இருப்பது மதிப்பெண். வெளியில் இருப்பது வினாவின் எண்ணிக்கை

# SSC PUBLIC EXAMINATIONS - 2024
# FIRST LANGUAGE - TAMIL (Model Question Paper)

**Class : X** **(Max. Marks : 100)** **Time : 3 hr. 15 min**

**மாணவர்களுக்கான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாளில் மொத்தம் 3 பகுதிகள் மற்றும் 33 வினாக்கள் உள்ளது.
2. கொடுக்கப்பட்ட விடைத்தாளில் விடைகளை எழுதவும்.
3. அனைத்து விடைகளையும் தெளிவாகவும் புரியும்படியும் எழுதவும்.
4. படிப்பதற்கு 15 நிமிடங்கள் மற்றும் எழுதுவதற்கு 3 மணிநேரம் வழங்கப்பட்டுள்ளது.

## பகுதி-I

I. **புரிந்து கொள்ளுதல் – விடையளித்தல்** **(32 மதிப்பெண்கள்)**

**1. கீழ்க்காணும் செய்யுளைப் படித்து, கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளி.**

8 மதிப்பெண்கள்

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோடம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.

– குலசேகராழ்வார்

**வினாக்கள்:**

அ) நோயாளி யாரை நேசிப்பார்?

ஆ) இப்பாடல் எங்கு வீற்றிருக்கும் இறைவனைப் போற்றுகிறது?

இ) இப்பாடலில் துன்பம் எனும் பொருள் தரும் சொல்லை எழுதுக.

ஈ) பாடலின் ஆசிரியர் பெயரை எழுதுக.

(அல்லது)

மாற்றம் எனது மானிடத் தத்துவம்
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை!
தலைவர் மாறுவர்: தர்பார் மாறும்
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!

– கவிஞர் கண்ணதாசன்

**வினாக்கள்:**

உ) கவிஞர் எதை அட்சய பாத்திரம் என்கிறார்?

ஊ) எவையெல்லாம் மாறும் என்று கவிஞர் கூறுகிறார்?

எ) கவிஞரின் வழி எதை அறிந்து செல்லும்?

ஏ) 'மானிடத் தத்துவம்' என்று கூறுவது எது?



CAREERS 360

**2. கீழ்க்காணும் அறிந்த உரைநடை பத்தியைப் படித்து, கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடையெழுதுக. (8 மதிப்பெண்கள்)**

சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள். இவை மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனி கொடுத்துக் கவலையைப் போக்குகின்றன: சமுதாய நிகழ்வுகளின் ஆவணங்களாகவும் செய்தியைத் தரும் ஊடகங்களாகவும் திகழ்கின்றன. பழந்தமிழ் மக்களின் கலை, அழகியல். புதுமை ஆகியவற்றின் எச்சங்களை அறிவதற்குத் தற்காலத்தில் நிகழ்த்தப்படும் கலைகள் துணைசெய்கின்றன.

**வினாக்கள்:**

அ) தற்காலத்தில் நிகழ்த்தப்படும் கலைகள் எவற்றை அறிந்து கொள்ள துணை செய்கின்றன?

ஆ) நிகழ்கலைகள் யாருடைய வாழ்வில் பிரித்துப் பார்க்க இயலாத கூறுகளாகத் திகழ்பவை?

இ) நிகழ்கலைகள் எதைக் கொடுத்து எதைப் போக்குகின்றன?

ஈ) மேற்காணும் பத்திக்குப் பொருத்தமான தலைப்பைக் கொடு?

**3. கீழ்க்காணும் துணைப்பாடக் கதையை வரிசைப்படுத்தி எழுதுக. (8 மதிப்பெண்கள்)**

(அ) 1985 இல் மூச்சுக்குழாய்த் தடங்களால் பேசும் திறனை இழந்தார்.

(ஆ) மருத்துவ உலகமே மிரண்டு போகுமளவு மேலும் 53 ஆண்டுகள் இயங்கினார்.

(இ மருத்துவத்திற்குப் பின் அவர் இன்னும் சில தினங்களே உயிர் வாழ்வார் என்றும், விரைவில் இறந்து விடுவார் என்றும் மருத்துவர்கள் அறிக்கை தந்தனர்.

(ஈ) ஸ்டீபன் ஹாக்கிங் 1963 ஆம் ஆண்டு இங்கிலாந்து மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டார்.

**4. கீழ்க்காணும் பத்தியைப் படித்து, கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையெழுதுக. (8 மதிப்பெண்கள்)**

வேதநாயகம் பிள்ளை, குளத்தூரில் பிறந்து மாயூரத்தில் மாவட்ட முனிசீப்பாக வேலை பார்த்தவர்: எல்லா சமயத்தினரும் சமரச மனப்பான்மையோடு வாழ வேண்டுமேன்ற நோக்கம் உடையவர். இதனை சர்வ சமய சமரசக் கீர்த்தனம் என்ற இவர்தம் நூலால் அறியலாம். மேலும் பெண்களுக்குக் கல்வி தேவை என்பதை வலியுறுத்தும் முறையில் ‘பெண்மதி மாலை’ என்னும் நூலையும் எழுதியுள்ளார். இவர் முதன்முதலில் ‘பிரதாப முதலியார் சரித்திரம்’ என்னும் நாவலை எழுதி தமிழ் இலக்கியத்திற்குச் செய்த சிறந்த தொண்டாகும். தமிழ்நாட்டில் தமிழ் நாவல் துறைக்கு வித்திட்டவர் இவரே ஆவார்.

**வினாக்கள்:**

அ) ‘சர்வ சமய கீர்த்தனம்’ எதனை வலியுறுத்துகிறது?

**[Cont.. 3rd]**

CAREERS360

ஆ) வேதநாயகம்பிள்ளை எங்கு பிறந்தார்?

இ) தமிழில் தோன்றிய முதல் நாவல் எது?

ஈ) பெண்களுக்குக் கல்வி தேவை என்பதை வலியுறுத்தும் நூல் எது?

## பகுதி - II

II. **சுயமாக எழுதுதல் - படைப்பாற்றல்** **(36 மதிப்பெண்கள்)**

**கீழ்க்காணும் வினாக்களுக்கு நான்கு அல்லது ஐந்து வாக்கியங்களில் விடை எழுதுக.** 3x4=12

5. பாரதியார் - குறிப்பு எழுதுக.

6. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

7. ‘அன்னமய்யா’ பண்பு நலனைக் குறித்து எழுதுக.

**கீழ்க்காணும் நெடுவினாக்களுக்கு எட்டு அல்லது பத்து வாக்கியங்களில் விடையளி.**

3x8=24

8. மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ்வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

(அல்லது)

சிலப்பதிகார மருவூர்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

9. அழகிரிசாமியின் ‘ஒருவன் இருக்கிறான்’ சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

(அல்லது)

‘புதியநம்பிக்கை’ கதையை பற்றிய உங்கள் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

10. ‘சான்றோர் வளர்த்த தமிழ்’ எனும் தலைப்பில் கையெழுத்து இதழ் தயார் செய்க.

(அல்லது)

உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

## பகுதி - III

III. **மொழித்திறன்** **(32 மதிப்பெண்கள்)**

**கீழ்க்காணும் வினாக்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலின்படி விடையெழுதுக.**

9x2=18

11. ‘போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
வாரல் என்பனபோல் மறித்துக்கை காட்ட’ 2ம

– இச் செய்யுள் அடிகளில் பயின்று வரும் அணியைச் சுட்டி விளக்கம் தருக.

[Cont.. 4th]

12. கீழ்காணும் குறட்பாவை அலகிட்டு வாய்பாடு எழுதுக. 2ம
உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

13. (அ) 'யாக்கையைப் பிணித்தென்று ஆக' – இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருளை எழுதுக. 1ம

(ஆ) 'அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச்' – இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருளை கண்டுபிடி. 1ம

1. கரும்பு 2. ஒலிக்கும் 3. பள்ளம் 4. அருமை

14. (அ) 'வேழ நெடும்படை கண்டு நடுங்கிடும் வில்லாளோ' – இவ்வடியில் வேழம் என்பதன் இருபொருள் எழுதுக. 1ம

(ஆ) 'கவிதைக்குப் பொய் அழகு' – இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்தரும் பலசொற்களை கண்டுபிடி. 1ம

1. வனப்பு, கவின் 2. எழில், முகில்
3. பொலிவு, கனவு 4. அலை, வெற்பு

15. (அ) மூவேந்தர்கள் போற்றி வளர்க்கப்பட்ட முத்தமிழ் வாழ்க – அடிக்கோடிட்ட தொகைச் சொல்லை விரித்தெழுதுக. 1ம

(ஆ) கோயில்களில் மக்கள் இறைவனுக்கு ஆராதனை செய்தனர் – அடிக்கோடிட்ட பிறமொழிச் சொல்லிற்கு நிகரான தமிழ்சொல்லை கண்டுபிடி. 1ம

1. நீராட்டு 2. வழிபாடு 3. வாழ்த்து 4. குடமுழுக்கு

16. (அ) குளிர் காலத்தை பொழுதாகக் கொண்ட நிலங்கள் யாவை? 1ம

(ஆ) இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணத்தைக் கண்டுபிடி. 1ம

1. நாட்டைக் கைப்பற்றல் 2. ஆநிரை கவர்தல்
3. கோட்டையை முற்றுகையிடல் 4. வலிமையை நிலைநாட்டல்

17. 'ஆறப்போடுதல்' – இம் மரபுத் தொடருக்குப் பொருள் எழுதுக. 2ம

18. 'சிலை மேல் எழுத்து போல' – இவ்வுவமைத் தொடரை வாக்கியத்தில் அமைக்கவும். 2ம

19. 'கண்ணினைக் காக்கும் இமைபோல'– இவ்வுவமைத் தொடரை வாக்கியத்தில் அமைக்கவும். 2ம

**கீழ்க்காணும் வினாக்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலின்படி விடையெழுதுக. 14 x 1=14**

20. 'நேற்று வருவான்' என்பது எவ்வகை வழு? 1ம

21. 'எந்தமிழ்நா' இச்சொல்லைப் பிரித்தெழுதுக. 1ம



CAREERS 360

22. ‘போன இடைக் <u>காடனுக்கும்</u> <u>கபிலனுக்கும்</u> அகத்துவகை’ – அடிக்கோடிட்ட சொல்லிற்கு இலக்கணக் குறிப்பைக் கண்டுபிடி. 1ம

1. எண்ணும்மை 2. உம்மைத்தொகை
3. வினைத்தொகை 4. பண்புத்தொகை

23. ‘செய்முறை’–இச் சொல்லிற்கு இலக்கணக் குறிப்பு எழுதுக. 1ம

24. காலத்தைக் காட்டும் பகுபத உறுப்பு எது? 1ம

25. ‘பதிந்து’ – இப்பகுபதத்தின் விகுதியை கண்டுபிடித்து எழுதுக. 1ம

1. பதி 2. த்
3. ந் 4. உ

26. ‘அண்ணன் தம்பி’ – என்பது எவ்வகைத் தொடர் என கண்டுபிடி. 1ம

1. தொகா நிலைத் தொடர் 2. தொகைநிலைத் தொடர்
3. அடுக்குத்தொடர் 4. விளித்தொடர்

27.‘கனிமொழி படத்தை வரைந்தாள்’ – இத்தொடரை செயப்பாட்டு வினைத் தொடராக மாற்றி எழுதுக. 1ம

28. மேரியும் கனகாவும் பேருந்தில் ஏறினர் – என்பது எவ்வகைத் தொடர் என கண்டுபிடி. 1ம

1. தொடர்நிலைத் தொடர் 2. தனிநிலைத் தொடர்
3. நேர்க்கூற்றுத் தொடர் 4. கலவைத் தொடர்

29. ‘அறிவழகன் திருக்குறள் கற்பித்தான்’– என்பது எவ்வகைத் தொடர்? 1ம

30. பாவம் நோயாளியாய் இருக்கிறான்! – என்பது ........... தொடராகும். 1ம

31. ஆசிரியரிடம் ‘இந்தக் கவிதையின் பொருள் யாது? என்று மாணவர் கேட்டல்’ எவ்வகை வினா? 1ம

32. ‘இது செய்வாயா?’ என்று வினவிய போது நீயே செய் என்று கூறும் விடை எவ்வகை விடை? 1ம

33. ‘ஆலத்து மேல குவளை குளத்துல
வாலின் நெடிய குரங்கு’
– மேற்காணும் பாடல் எவ்வகைப் பொருள்கோளிற்குப் பொருந்தும் என்பதைக் கண்டுபிடி. 1ம

1.கொண்டு கூட்டுப் பொருள்கோள் 2.எதிர்நிரல் நிறைப் பொருள்கோள்
3.மொழி மாற்றுப் பொருள்கோள் 4.ஆற்றுநீர்ப் பொருள்கோள்

* * * * *